# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.32/2021

வாதிகள் தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கிலிச்சாமி வா.சா.–1 | | |
| த/பெ. | சங்கரசாமி | | |
| கிராமம் | பாலையம்பட்டி | தொழில் | Civil Contractor |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 54 |

---

முதல் விசாரணை 10–06–2026.

நான் இந்த வழக்கின் 1ம் வாதி. 2 முதல் 5ம் வாதிகள் எங்கள் டிரஸ்டின் நிர்வாகிகள். வாதிகள் தரப்பு 1வது சாட்சி. என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக எனக்காகவும் மற்ற வாதிகளுக்காகவும் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை வாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

(1) தாவா சொத்திற்குரிய நத்தம் பட்டா எண்.79 கணினி நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(2) தாவா சொத்திற்குரிய பட்டா மாறுதல் உத்தரவு அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(3) 24.05.2015ம் தேதிய தினத்தந்தி விளம்பர நாளிதழ் அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(4) 25.05.2015 ம் தேதிய தினத்தந்தி விளம்பர நாளிதழ் அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(5) 23.11.2020 ம் தேதிய வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற விசாரணை அழைப்பாணை அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(6) 10.12.2020 ம் தேதிய வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வாதிகள் தரப்பில் கொடுக்கப்பட்ட ஆட்சேபணை கைநகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(7) 09.12.2020 ம் தேதிய திருச்சுழி காவல்நிலையத்தில் வாதிகள் 1 முதல் 4 ம் பிரதிவாதிகள் மீது கொடுத்த புகார் மனு கைநல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்களை மேலும் குறியீடு செய்ய வேண்டி முதல்விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S